2015 ஆகஸ்ட் 25]

134—

ஆவின் பாலகம்

***53151—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, கீழ்க்கண்ட பதிலைத் தெரிவிக்க விழைகின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் விவகார எல்லையானது சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். இதில், காரைக்குடி சட்டமன்றத் தொகுதி சிவகங்கை மாவட்ட வருவாய் எல்லைக்குள் அடங்கும். சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் ஜூலை 2015 நிலவரப்படி, சராசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 45,224 லிட்டர் ஆகும். சிவகங்கை ஒன்றியம், காரைக்குடி நகரில் நாளொன்றுக்கு சுமார் 13,646 லிட்டர் பால், காரைக்குடியில் அமைந்துள்ள 23 பாலகங்கள் மூலமாகவும், 24 மொத்த பால் விற்பனையாளர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. காரைக்குடி நகரில் புதிய பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்கித் தருமாறு 8–1–2015 அன்று காரைக்குடி நகராட்சி ஆணையருக்கு சிவகங்கை ஒன்றியம்மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, காரைக்குடி தொகுதி, காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் நகராட்சி நிருவாகத்தின் அனுமதி கிடைத்தவுடன்

அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப் பேச்சின் மூலதனத்தில் வான்முட்டும் வசதிகளைப் பெற்று, தான் மட்டும், தன் பிள்ளைகள் மட்டும் என வாழ நினைக்கும் வீணர்கள் மத்தியில், அம்மா என்றழைக்கும் ஆநிரைகளுக்கும் அருள்பாலிக்கும் தாய்தான் அகிலம் போற்றும் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் சொல் புரட்சி, செயல் புரட்சி, அரசியல் புரட்சி கண்டது தமிழ்நாடு சரித்திரம்! வெண்மைப் புரட்சி, பசுமைப் புரட்சி, தொழில் புரட்சி கண்டு சாதனை படைத்தது அம்மா சகாப்தம்! கோமாதா; மக்கள் தொழும் எங்கள் குல மாதா நம் அம்மா! பசு பாலமுதம் தந்து மனித குலத்தின் பசி தீர்க்கின்றது; நம் அம்மாவோ, பசுக்களையே ஏழைகளுக்குத் தந்து பசிப்பிணி போக்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழனத்தின் தலைவியாம் அம்மாவின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

காரைக்குடி தொகுதி, காரைக்குடி நகராட்சிப் பகுதியில் உள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு நாளொன்றுக்கு சுமார் 700 முறை பேருந்துகள் வந்து செல்கின்றன. அதேபோல, பழைய பேருந்து நிலையத்திற்கு சுமார் 200 முறை பேருந்துகள் வந்து செல்கின்றன. இந்த இரண்டு பகுதிகளிலும் ஆவின் பாலகம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சென்றமுறை கோரிக்கை வைத்திருந்தோம். இன்னும் அந்தப் பாலகம் அமைக்கப்படவில்லை. தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் நகராட்சியின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், உடனடியாக ஆவின் பாலகம் அமைத்துத் தரப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், காரைக்குடி பழைய பேருந்து நிலையம், தேவகோட்டை பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளிலும் ஆவின் பாலகம் அமைத்துத் தர ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2015 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகரிலுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு நாளொன்றுக்கு 500 முறை பேருந்துகள் வந்து செல்கின்றன. இதன்மூலம் நாளொன்றுக்கு சுமார் 10,000 பயணிகள் காரைக்குடி நகருக்கு வந்து செல்கின்றனர். ஆகவே, காரைக்குடி நகரில் புதிய பேருந்து நிலையம், பெரியார் சிலை அருகில், தண்ணீர் தொட்டி அருகில், பழைய பேருந்து நிலையம் அருகில், செஞ்சை ஊரணி அருகில் மற்றும் கழனிவாசல் அருகில் உள்ள இடங்களில் ஆவின் பாலகங்கள் அமைக்க இடம் ஒதுக்கித் தருமாறு கடந்த 8–1–2015 அன்று காரைக்குடி நகராட்சி ஆணையருக்கு சிவகங்கை ஒன்றியம் மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, காரைக்குடி தொகுதி, காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் நகராட்சியின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், உடனடியாக அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள் விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

அம்மா ஆரோக்கியத் திட்டம், முழு உடல் பரிசோதனைத் திட்டம், புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குதல் உள்ளிட்ட மருத்துவ மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*